# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார அமைச்சு

*களஃஅலுவலக உத்தியோகத்தர் பிரிவு - 01 இன் சேவை வகையின் (MN 06-2006A) உளவியலாளர் தரம் II பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 2021*

சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு கள/அலுவலக உத்தியோகத்தர் பிரிவு 01 இன் சேவை வகைக்குரித்தான (MN 06 - 2006A) உளவியலாளர் பதவியின் தரம் II இன் 07 பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை.**- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளில் சுகாதார வைத்திய அமைச்சின் செயலாளரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் தகுதிகள் பரீட்சிப்பதற்கான ஒரு நேர்முகப் பரீட்சையில் உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் இப்பதவிக்காக தெரிவு செய்யப்படுவர்.

02. **தேவையான அடிப்படை தகைமைகள் :**

2.1 **கல்வித் தகைமைகள் :-**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் தொடர்பான சிறப்புப் பட்டத்துடன் உளவியல் தொடர்பான பட்டப்பின்பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2.2 **தொழிற்தகைமைகள்:-** அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனமொன்றில் உளவியல் மருத்துவம் (Clinical psychology) தொடர்பாக 02 வருட பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

2.3 **உடல் தகுதிகள்:-** நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ரீதியான தகுதியை கொண்டிருத்தல் வேண்டும்.

2.4. **பிற தகுதிகள் :**

* விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்திற்குள் தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **வயதெல்லை:-** விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 21 வயதிற்கு குறையாமலும், 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

04. **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.02.25 ஆந் திகதிய 03/2016 எனும் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் உப அட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்தான மாத சம்பள அளவு ரூபா 36,585.00 - 10 × 660 - 11 × 755 - 15 × 930 - ரூபா 65,440.00 MN 06-2016 (ஏ) ) ஆகும்.

05. **எழுத்துப் பரீட்சை :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடய உள்ளடக்கம் | காலம் | அதிகூடிய புள்ளி | சித்தியடைய பெறவேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | சொற்கள் மற்றும் உருவமாக வழங்கும் சிக்கல் தொடர்பாக அபேட்சகர் வெளிப் படுத்தும் ஆற்றல் மற்றும் வெளிப்படுத்தும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், குறிப்பிட்ட கால எல்லை மற்றும் சந்தர்ப்பத்திற்குள் தொடர்பை விளங்கிக் கொள்வதை அபேட்சகர் கொண்டுள்ள திறமை என்பவற்றை கணிப்பிடுவதே இதன் நோக்கமாகும். | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடய உள்ளடக்கம் | காலம் | அதிகூடிய புள்ளி | சித்தியடைய பெறவேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| 2. துறைசார் அறிவு | உள ஆரோக்கியம் மற்றும் உளவியல் சிகிச்சைகளுடன் இணைந்ததாக இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். | 3 மணித்தியாலம் | 100 | 40% |

06. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்க வேண்டும்;

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியதுமுடையதுமாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். அத்துடன் நீங்கள் விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் அறிவிக்கப்பட்டவாறு நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்;

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/ 2020 பிரகாரம் அரச மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்;

(iv) இப்பதவி 03 வருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டதாகும்;

(v) இப்பதவி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரச நிதி ஒழுங்கு முறைகள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

07. **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்ப முடிவுத் திகதி 2021.03.05 ஆந் திகதி ஆகும். விண்ணப்பங்கள் 2021.03.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பிறகு கிடைக்கக்கூடிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பணிப்பாளர் (நிர்வாகம்) 07,
சுகாதார அமைச்சு,
385, பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு - 10.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தை A4 அளவு கடதாசியில் இலக்கம் 01 தொடக்கம் 06 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 07 தொடக்கம் 10 வரை இரண்டாம் பக்கததிலும் அமையும் வண்ணம் தயாரித்து தமது கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல்முனையில் "உளவியலாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்த்தலுக்கான (திறந்த) விண்ணப்பப்படிவம்" என குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) இது தொடர்பான எதிர்கால கடித பரிமாற்றங்கள் இணையத்தள வழியினூடாக மேற்கொள்ளப்படலாம். எனவே நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு மின்னஞ்சல் முகவரியை வழங்கவேண்டியது கட்டாயம் என்பதுடன் அது தொடர்பாக விழிப்புடன் இருக்கவும்.

(v) பரீட்சைக் கட்டணம் ரூபா 500.00 ஆகும். இலங்கை வங்கி, தப்ரபேன் கிளையில் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் உள்ள 7041318 எனும் கணக்கு இலக்கத்திற்கு வரவு வைக்கும் வகையில் இப்பணத்தை எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழராதவாறு மாதிரிப் படிவத்தில் உள்ள பெட்டியினுள் ஒட்டவேண்டும். (காசுக்கட்டளை மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.) பரீட்சைக் கட்டணம் எந்த காரணத்திற்காகவும் திருப்பித்தரப்பட மாட்டாது.

(vi) விண்ணப்பத்தில் இலக்கம் 09 இன் கீழ் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்திய ஆணையாளர் ஒருவரினால்/ சட்டத்தரணி/

பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் ஆணையிடும் அதிகாரி ஒருவரினால்/பொலிஸ் பதவியில் வரத்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 273,060.00 இற்கு மேற்பட்ட வருட ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவியில் இருக்கும் உத்தியொகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(vii) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை தாம் பணி புரியும் திணைக்களத்தின் திணைக்கள தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(viii) இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைதல் அல்லது தாமதித்தல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதியானவர்கள் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது தொடர்பாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அறிவிக்கப்படும்.

(எல்லா வகையிலும் முழுமையான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.)

08. **விண்ணப்பதாரியை அடையாளப்படுத்துதல்** : எழுத்துப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வருவனவை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

09. **உண்மைக்கு புறம்பான தகவல்கள் வழங்குதல்.-**
உங்களினால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பொய் அல்லது பிழையானவையென ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டறியப்பட்டால் உங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறே பொய் அல்லது பிழையானவையென ஆட்சேர்ப்பின் பின்னர் கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

* இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டவையே வலுவில் இருக்கும்.

* இந்த நியமனம் தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரது தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

கலாநிதி எஸ். எச். முணசிங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2021, சனவரி 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சின் உளவியலாளர் தரம் II பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 2021**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம் - S/ஆங்கிலம் - E/தமிழ் - T) ☐ வதிவிட மாவட்டம் : ☐

01. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் : ..................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உ+ம் :- Mr./ Mrs./ Miss SILVA A. B.
Mr./ Mrs./ Miss :........................................................................ ...................................................................

1.2 முழுப்பெயர் : ..................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) .......................................................................................................

